**கஹட்டகஹ கிறபைட் லங்கா லிமிட்டட் – 2017/2018**

கஹட்டகஹ கிறபைட் லங்கா லிமிட்டட்டின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பக்கள் உள்ளடங்கிய 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்று எனக்கு உதவியது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பணிகப்பாளர் சபையின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 02. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

கம்பனியின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் பேணப்படுகின்றன என்பதும்,
- கம்பனியின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பதும்,
- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 மற்றும் 153 ஆம் பிரிவுகளின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 2003 யூன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பீஈடி சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் அத்தியாயம் | பொது முயற்சிகள் செலவினங்களை மேற்கொள்ளக்கூடாது அல்லது வரிசை அமைச்சுக்கள் அல்லது ஏனைய பொது நிறுவனங்களிற்கு வளங்களை வழங்கக்கூடாத போதிலும் அதனை மீறி 2015 திசெம்பர் முதல் மீளாய்வாண்டின் நவம்பர் வரையான காலப்பகுதியின் போது வரிசை அமைச்சிற்கு அனுப்பப்பட்ட 10 ஊழியர்கள் தொடர்பாக சம்பளங்கள் மற்றும் கூலிகளாக ரூபா 4,903,305 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ii) | 2013 செப்தெம்பர் 11 ஆம் திகதிய 02.˙.2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.5 ஆம் அத்தியாயம் | 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 14,899,666 தொகை பணிக்கொடை நலன் நிதியத்தில் முதலீடு செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும், கம்பனியால் ரூபா 6,587,639 மாத்திரமே முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2007 ஒக்தோபர் 04 ஆம் திகதிய டி.எம்.எஸ;/11ஜீ/09 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் | நிறுவனத்திற்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வது ஒப்பந்த காலத்திற்கு உட்பட்டு மாத்திரமே கருதப்படுகிறது என்றும் ஒப்பந்த காலத்தை நீடிப்பது நிறுவனத்தின் இலாபத்தன்மை அடிப்படையில் கருதப்படுகிறது என்றும் எனக்கு அறிவிக்கப்பட்டது. எனினும், 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 ஆம் இலக்க நிர்வாகச் சுற்றறிக்கை கம்பனிகளிற்கு பயன்படுத்தப்படாத போதிலும் மேற்படி சுற்றறிக்கையின் அடிப்படையில் 2014 நவம்பர் 01 ஆம் திகதி முதல் 10 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

## 03. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் வரிக்கு முன்னரான தேறிய நட்டம் ரூபா 2,931,823 தொகையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் தேறிய நட்டம் ரூபா 2,522,041 ஆக காணப்பட்டதால் மீளாய்வாண்டின் போது நிதி விளைவுகளில் ரூபா 409,782 தொகையான வீழ்ச்சியொன்றை பதிவுசெய்திருந்தது. மீளாய்வாண்டின் விற்பனை வருமானம் ரூபா 10,994,317 ஆல் அதிகரித்திருந்த போதிலும் ரூபா 21,342,087 இருப்பு பற்றாக்குறை இந் நட்டத்தை ஏற்படுத்தியிருந்தது.

## 04. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கம்பனியின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் வருடாந்த கனிம உற்பத்தியை 775 மெற்றிக் தொன்னிலிருந்து 900 மெற்றிக் தொன் வரை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உண்மையான உற்பத்தியை 750 மெற்றிக் தொன்னுக்கு மேல் அதிகரித்திருக்க முடியாதிருந்தது.